
குருவே துணை
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
என்னைச்
செதுக்கிய
நூல்
ஞானக்களஞ்சியம்...
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# என்னை செதுக்கிய நூல் – ஞானக்களஞ்சியம்

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

## அணிந்துரை

"நீதிநெறி உணர் மாந்தராகி, வாழும்

நிலையுணர்ந்து தொண்டாற்றி இன்பம காண்போம்"

எமது முகநூலான "வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்" என்ற குழுவை – கணிணியில் திறந்தவுடனே ஒருவித திகைப்பு –ஆச்சரியம்.

ஒவ்வொரு நாளும் என்னைப் பற்றி – அன்பின் காரணமாக அளவுக்கு மீறிப் புகழ்ந்து உரைக்கிறார்கள். "புகழ்" என்ற தலைப்பில் வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியத்தின் உள்ள பாடல்தான் என் நினைவுக்கு வருகிறது.

### புகழ் மனித சமுதாய நற்சான்றாகும்

"புகழுக்கு விரும்புவாயேல், அந்த வேட்பே புகழ் மூலமாகத்

புகழ் அணுகாமல் துரத்தும் சக்தியாகும்.

புகழ் ஒருவர் கடமை எனும் மலர் மணமாம்

புகழ் மனித சமுதாய நற்சான்றாகும்." (ஞாக.பா.1617)

புகழ் என்பது ஒருவரின் கீர்த்தியைப் பாராட்டினைக் குறித்து மேன்மைப்படுத்திக் கூறப்படும் வார்த்தையாகும்.

பிறர் நலன் குறித்து சிந்தித்தும், சமுதாய நலன் விரும்பியும் வாழ்கின்ற வரை, மானுடம் பாராட்டுத் தெரிவிக்கின்ற வகையில், எண்ணுவதும் சொல்லுவதுமான மதிப்புக்களை வெளிப்படுத்துவது புகழ் ஆகும்.

கடமை உணர்வில் கர்மயோகிய வாழ்பவருக்கு மக்கள் காட்டும் நன்றி உணர்வும் பாராட்டுமே புகழ் ஆகும்.

கடமை என்னும் மலர் மலருமேயானால், அதன் வாசனையால் கவரப்பட்ட வண்டினங்கள் பூச்சிகள் முதலியன மலரை நாடி வந்து தேன் அருந்தி, மகரந்தச் சேர்க்கைக்கும் உதவுகிறது.

அந்த மலரின் மனம் போன்றது – கர்மயோகிகளின் கடமை அறம். கடமை அறத்தை செய்யாமல் ஒருவர் தான் புகழ்பெற வேண்டும் என ஆசைப்பட்டால், அந்த ஆசையே புகழை அணுகவிடாமல் துரத்துகின்ற சக்தியாகிவிடும்.

கர்மயோகம் என்பது இயல்பாக அமைந்தால் புகழ் என்பதும் தானாகவே வரும். நாமாகத் தேடிப் போனால் புகழானது நம்மை அணுகாது.

“வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்” குழுவில் இருப்பவர்கள் – பல துறைகளில் சிறப்புப் பெற்றவர்கள்; சான்றோர்கள், அறிஞர்கள், விஞ்ஞானிகள், பெரும் பேராசிரியர்கள். அதிலும் மனவளக்கலை பேராசிரியர்கள். மனவளக்கலை பயிற்சி பெற்றவர்கள்.

கற்றோர் முன் எழுதுகின்றபொழுது, பிழை ஏற்பட்டுவிடக் கூடாதே என்ற அச்சம் எனக்கு ஏற்படுகிறது.

இருந்த போதிலும்கூட, பிள்ளையைத் தந்தை பார்த்து மகிழ்வது போல நான் பேசுகின்ற எழுதுகின்ற சொல்லைச் செவிமடுத்து உள்வாங்கி என்னை வாழ்த்துவார்கள் என்று கருதுகிறேன்.

அன்பர்களும் நண்பர்களும் அறிஞர்களும் சான்றோர்களும் கொடுத்திருக்கிற இந்தப் பெருமை என்றும் நினைந்து மகிழ்வதற்கு உரியது. இதனை நான் மிகப்பெரிய பொக்கிஷமாகக் கருதுகிறேன்.

இந்த உயர்புகழ் என் மனதில் இருந்து நீங்காது. இது ஒரு பசுமையான நினைவுகளைச் சுமந்திருக்கும்.

உயர் புகழ் பற்றி வேதாத்திரியம் அழகாக விரிவாக விளக்கமாக சொல்கிறது.

- புகழ் மூலமாகத்தான் நமக்கு மற்றவர்களோடு தொடர்பும், நட்பும் கிடைக்கின்றன, உயர்புகழ் என்பது எப்படியும் புகழ் பெறலாம், இருக்கலாம். எப்படி வேண்டுமானலும் பெறலாம் என்பது அல்ல. உலகத்துக்கு நன்மையான செயல்களையே செய்து அதனாலே மக்கள் மனம் ஒரு நிறைவு பெற்று அவர்கள் வாழ்க்கையிலே துன்பங்கள் நீங்கி இன்பம் மலரக் காணும்போது, அந்த மக்களால் அளிக்கக்கூடிய ஒரு வாழ்த்து ஒரு மனநிறைவுதான் "உயர்புகழ்"

- புகழ் என்பது தான் விரும்பிப் பெறுவதோ. தானே ஏதேனும் ஒன்றைச் செய்து அதன் மூலமாக வரவேண்டும் என்று நினைப்பதோ அல்ல. தன் செயலின் மூலமாக மக்கள் காட்டும் மனநிறைவுதான் புகழாகும்."
(வேதாத்திரிய சிந்தனை விருந்து – தினசரி தியானம்)

## முகநூலில் இருந்து சில துளிகள்

- வேதாத்திரியத்தில் இருந்து தோன்றிய பலவிருட்சங்களில் தங்களையும் ஒரு விருட்சமாக எண்ணத் தோன்றுகிறது, தங்கள் பணி வேதாத்திரியத்தில் ஒட்டியே நீண்டு வாழ எல்லாம் வல்ல இறை ஆற்றலும் அருள் தந்தையின் ஆற்றலும் உங்களுக்கு கிடைக்க வேண்டும். வாழ்க வளமுடன். வாழ்க வையகம். Rajendran MK

- அய்யா, அற்புதமாய் வேதாத்திரிய சாரத்தை, அதன் மேன்மையை அளித்துள்ளீர்கள். மகரிஷியின் கருத்துக்களை

தாங்கள் உள்வாங்கிய சிறப்பை, எங்களுக்கு, உணர்ந்து அறிய தந்த உங்கள் உயர்ந்த உள்ளத்துக்கு மிக்க நன்றி. வாழ்க வளமுடன். Geekay Geekay

## ‘என்னை செதுக்கிய நூல் – ஞானக்களஞ்சியம்

‘என்னைச் செதுக்கிய நூல்கள் என்று எழுத நினைத்த பொழுது முதலில் வந்து நிற்பது வேதாத்திரியின் ஞானக்களஞ்சியம் தான்.

செதுக்கிய என்று பார்க்கிற சமயத்திலே அது ஒரு சிற்பமாகத்தான் இருக்கும். ஒரு பாறை இருக்கிறது. அதனை ஒரு சிற்பி சிலை வடிக்க நினைக்கிறார். சிற்பம் வடிக்க நினைக்கிறார். மிகச்சிறந்த பாறையைத் தேர்ந்தெடுக்கிறார்.

அதில் ஒரு சிறந்த அழகிய உருவத்தைக் காணுகிறார். அந்தப் பாறையில் வேண்டாத பகுதியை நீக்கிவிடுகிறார். அங்கே அழகிய சிற்பம் கிடைக்கிறது.

அதற்கு எந்த உளியைப் பயன்படுத்துகிறார்? கலைநயத்தை, கற்பனையை, அறிவை, அனுபவத்தைப் பயன்படுத்தி மன ஒருமைப்பாட்டுடன் அந்தச் சிலையை வடிக்கிறார்.

பாறையில் உள்ள வேண்டாத பகுதியை நீக்கியவுடனே, அழகிய சிற்பம் அமைந்து விடுகிறது.

அதுபோல வாழ்க்கை ஒரு பாறையாக இருந்தால் அதில் வேண்டிய பகுதிகளை வைத்துக் கொண்டு, வேண்டாத பகுதியை நீக்கிவிட்டால் அழகிய வாழ்க்கை என்னும் சிற்பம் அமைந்து விடும். அதுபோல பாறையாக இருந்த என்னை செதுக்கி அழகிய சிற்பமாக செதுக்கியது வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியமே.




ஒரு மனிதனை உருவாக்குவது எது? சந்தர்ப்பமா? சூழ்நிலையா? எது அவனை உருவாக்குகிறது?

ஒரு வித்து இருக்கிறது. அதை நல்ல விளை நிலத்தில் போடுகிறோம். நல்ல விளைநிலத்தில் போடுகின்ற சமயத்திலே அங்கு அந்த விதை தன்னை முளைவிட்டுக் காட்டுகிறது. அந்தச் செழிப்பு மண்ணுடைய செழுமையைக் காட்டுகிறது.

எந்த விதை போட்டோமோ அந்த விதை தன் கருவை வெளிப்படுத்துகிறது. ஆகவே சூழ்நிலையும், சந்தர்ப்பமும் ஒரு விதையின் தோற்றத்தை மண்ணிற்கு ஏற்ப மாற்றி விடுகிறது. 'விதை ஒன்று போட்டால் சுரை ஒன்றா முளைக்கும்?'

மாம்பழ விதை போட்டால் மாமரம் கிடைக்கும். பலா விதை போட்டால் பலாமரம் கிடைக்கும். எந்தக் கனி விதையைப் போடுகிறோமோ அந்தக் கனி மரம் கிடைக்கும்.

ஆகவே மனிதனைச் சூழ்நிலையும், சந்தர்ப்பமும் உருவாக்குகின்றனவா என்றால் சூழ்நிலையும் சந்தர்ப்பமும்

உருவாவதற்குத் துணைபுரிகின்றனவே தவிர அவனை உருவாக்குவதில்லை அதுதான் ஒருமனிதனுடைய சிறப்பு- உயர்வு.

## “முழு மனிதன்” யார்”

உலகில் உள்ள எல்லாத் தோற்றங்களிலும் எல்லா உயிர்களிலும் சிறந்த மேலான ஒரு இயக்க நிலை மனித உருவம்.

இயற்கையின் ஒரு சிறு கூறு தான் மனிதன் ஆனாலும் பேரியக்கமண்டலத்தில் விளங்கும் எல்லாச் சிறப்புகளும் நுணுக்கமாக உள்ளடக்கம் பெற்ற திருவுருமாக மனிதன் திகழ்கிறான்.

உடல் – உயிர் – மனம் என்ற மூன்று தத்துவங்களின் ஒரு உன்னதமான இணைப்புதான் மனிதன்.

மரதினிலே விதையும் அந்த வித்தினால் மரம்போல், மனிதனுக்குள் தெய்வம், அந்த தெய்வத்திற்குள் மனிதன்.

“முழு மனிதன்” யார்” வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம் விடையாக வருகிறது. (ஞானக் களஞ்சியத்தில் தங்க நெற்கதிர் போன்ற பாடல்.)

“மனிதனென்ற உருவினிலே மாக்களுண்டு, மக்களுண்டு

மனமறிந்த தேவருண்டு. மதி நிலைத்த மனிதருண்டு.


மனமறிந்து மனஇதயமாய், மாக்களுக்கும் மக்களுக்கும்

மனமுவந்து தொண்டாற்றும், மாமுனிவோன் முழுமனிதன்.” (ஞாக.பா.297)

நில உலகில் மனிதகுலம் தோன்றி சுமார் 65 லட்சம் ஆண்டுகள் ஆகியுள்ளதாக வரலாற்று ஆராயச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

விலங்கினத்தின் வித்துத் தொடராக பரிணமித்துள்ளதால், உருவத்தால் மனிதராகயிருந்தாலும், கருமையத்தில் விலங்கு நிலைப் பழக்கப் பதிவுகள் அடக்கம் பெற்றுள்ளன.

ஆறாவது அறிவு மலர்ச்சி பெற்றதால் மனம் என்ற சிறப்பை உடையவன் மனிதன் மட்டுமே ஆவான்.




ஒவ்வொரு காலத்திலும் பூ உலகில் அஞ்ஞானிகள், விஞ்ஞானிகள், மெய்ஞானிகள் என்று மூவகை மனிதர்கள் உள்ளனர்.

உடல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவில் செயல்பட்டு வாழ்பவன் அஞ்ஞானி. அவர்கள் ஒன்றுமே தெரியாதவர்கள்.

“மா” என்றால் விலங்கு, மாக்கள் என்றால் விலங்கு வடிவான மானிடம் என்பதாகும். பசித்தால் உண்பது, உறக்கம் வரும்போது தூங்கவது, இனவிருத்தி செய்வது, இறந்து விடுவது இதுவே விலங்கு நிலை வாழ்வு ஆகும்.

தோற்றப் பொருட்களை ஆராய்ந்து அவற்றை மனிதகுல வாழ்விற்குப் பயன்படுத்திக் கொள்ளும் அளவிற்கு அறிவை உயர்த்திக் கொண்டவர்கள். விண் பற்றிய அறிவுடையவர்கள் விஞ்ஞானிகள்.

அவர்களைப் பொதுவாக மக்கள் என்கிறோம். மனத்தின் மாண்பு எதுவோ அதுவே மனிதனின் மாண்பு.

மனதை உயர்த்தி அறிவு என்ற நிலையில் தெய்வீகத்தைத் தனக்குள்ளும் புறமுமாக உணர்ந்தவர் தேவர் ஆவர்.

அறிவை உணர்ந்து அந்த அளவிலேயே நின்றுவிட்ட மனிதர்கள் உள்ளனர். மனதை அறிந்து மனதின் மறுமுனை தெய்வமே அறிவாக உள்ளது என்ற மெய்மையை, உண்மையை உணர்ந்தவர்கள் மெய்ஞானிகள்.

மனிதகுலத்தில் வாழ்ந்து கொண்டுள்ள மக்களாயினும், மாக்களாயினும் அனைவரையும் சமமாக பாவித்து முழு மனதுடன் தொண்டாற்றுகின்ற உயர்ந்த தவசியே முழுமனிதன் ஆவான். அவனே மெய்ஞ்ஞானி.

முழு மனிதன் எந்தச் சாதியில் பிறந்தாலும் எங்கே பிறந்தாலும் சரி ஒரு பாரம்பரியம் என்று சொல்கிறோமே, அதுபோல பாரம்பரியச் சிறப்பு உடையவர்களுக்கு இயல்பாகவே சில பண்பாடுகள் அமைந்திருக்கும்.

## நல்லோர் இயல்பு

**மழை நீர் துளி**
**பழக்கக் காய்ச்சிய இரும்பில்**
**பட்டவுடன் ஆவியாகி**
**மறைந்து விடும்**

**தாமரை இலைமேல் விழுந்தால்**
**முத்து போல்**
**அழகாக தோற்றம் தரும்**

**கடலில் சிப்பிக்குள்**
**விழும் வாய்ப்பிருந்தால்**
**முத்தாகவே மாறிவிடும்**

**கீழோர்**
**மத்திமர்**
**மேலோர்**
**ஆகியவர்களின் இயல்பு**
**அவரவர் சேர்க்கையால் அமைகிறது.**

முழு மனிதர்களிடம் ஒழுக்கம், நேர்மை, பிறர்க்கு உதவுதல், அன்பு, ஒப்புரவு, கண்ணோட்டம் என்ற சான்றாண்மைப் பண்புகள் மரபு வழியில் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும்.

நல்லோர் இயல்பு பற்றி வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம் சொல்கிறது (ஞானக் களஞ்சியத்தில் தங்க நெற்கதிர் போன்ற பாடல்.)

“நன்மை பிறர்க்களித்து, நஷ்டத்தைத் தான்ஏற்று,

இன்பம் அடைவார்கள் ஈசன் நிலையறிந்தோர்.

வன்மை வழக்குடையோர் வருந்திடினும், அருள் கூர்ந்து

மென்மொழியால், அவர்கட்கும் மிக அன்பாய்ப் பதில் சொல்வர்,” (ஞாக.பா.636)

எண்ணிலடங்காத பிறவிகள் எடுத்து, தற்போது நில உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

வாழ்வின் நோக்கமும் தெரியாமல், வாழ்க்கையை விளங்கிக் கொண்டு வாழாமல், அறியாமை, அலட்சியம், உணர்ச்சிவயம் என்ற வகையில் செயல்களாற்றி பெற்ற பழக்கப் பதிவகள், ஒவ்வொருவருடைய கருமையத்திலும் ஆன்மக் களங்கங்களாக உள்ளன.

பெற்றோர் மூலம் வந்தவை சஞ்சித கர்ம வினை என்றும். பிறந்தது முதல் இந்த நிமிடம் வரை உடல், மன இயக்கத்தின் மூலம் வந்தவை சஞ்சித பிராரப்த கர்ம வினை என்றும் கூறப்படுகிறது.

நல்வினை, தீவினை என்னும் இருவகைப் பதிவுகளும் உள்ளன. களங்கங்களை எல்லாம் தூய்மைப்படுத்தாமல், பிறவியின் நோக்கமாகிய இறையுணர்வு கிட்டாது.

ஆகவே இந்த உண்மைகளை உணர்ந்தவர்கள் ஈசன் என்னும் இறைநிலையின் செயல்விளைவு நியதியை உணர்ந்தவர்கள் ஆவர்.

நன்மையான விளைவுகளை மற்றவர்க்கு வழங்கி, நட்டத்தையும் துன்பத்தையும் ஏற்று சகித்து இன்பம் காண்பவர்கள் இறையுணர்வாளர்கள்.

துன்பத்தை நட்டத்தை நிகழ்ச்சியாகவே கொண்டு, தீய வினைப் பதிவுகளைக் கழித்துச் கொள்வதற்கான வாய்ப்பாக கருதுவார்கள்.

கடுமையாக எதிர்வாதம் செய்பவர்களாக இருப்பினும், அவர்கள் வருத்துவதையும் ஏற்று தங்களது மென்மையான மொழியின் மூலம் மிக அன்பாக பதில் அளிப்பார்கள். இவையே நல்லோர்களின் இயல்பு.

அப்படிப்பட்ட நல்லோர்களின் குடும்பங்கள் தனிச் சிறப்புடையனவாக இருக்கும். அதனால் முழுமனிதன் என்பது முக்கியமான ஓர் உண்மை.

அதுமட்டுமல்லாமல் பழகுகின்றவர்கள், படித்த புத்தகங்கள், சார்ந்து இருப்பவர்கள் இவைகளெல்லாம் ஒருவரது வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

அந்த வகையில் எனக்கு ஒரு மகிழ்ச்சி என்னவென்று சொன்னால் நான் வரலாற்றைச் சொல்லுகின்ற அளவுக்குப் பெருமையுடையன் அல்ல. இருந்தாலும் இந்த நேரத்தில் சொல்வதும் எழுதுவதும் பொருந்தும் என்பதனால் சில செய்திகளை நான் எழுத விரும்புகிறேன்.

## வித்தில் இருக்கக்கூடிய கரு

என்னுடைய ஊரில் இருந்த எனது தாய்வழி பாட்டி ஓர் அருளாளராக இருந்தார். அவர் ஆன்மீகச் செல்வாக்கு உடையவராக இருந்தார்.. அதுபோல என் தாயும் அதிகம் படிக்காதவராக இருந்தாலும் கூட ஓர் அருளாளராகவும் பிறர் நலம் பேணக் கூடியவராகவும் இருந்தார்.

ஏறக்குறைய எழுபது ஆண்டுகள் என்று சொல்லலாம். அவர்கள் நிறைய அறப்பணிகள் செய்தார்கள். ஆன்மீக உணர்வை சிறுவயதிலேயே எனக்கு ஊட்டினார்கள். ஒழுக்கம், பண்பாடு, நேர உணர்வு, பக்தி, ஞானம் என்ற பண்புகளை எனக்கு சிறுவயதிலேயே ஊட்டி வளர்த்தார்கள்.

அந்தப் பாரம்பரியப் பண்புகள் என்னை அறியாமலே என்னுள் வித்திட்டு இருக்கின்றன என்று நான் கருதுகிறேன்.

நான் உருவாவதற்கும் வேதாத்தியத்தின் ஞானக்களஞ்சியத்தில் ஈடுபாடு கொள்வதற்கும் இயல்பாகவே அவர்களுடைய வித்தில் இருக்கக்கூடிய கரு எனக்கு கிடைத்திருக்கிறது என நான் கருதுகின்றேன்.

## “கருவில் திரு உடையார்”

இந்த நேரத்தில் அருட்தந்தையின் விளக்கத்தை உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

ஆத்மதாகம் கொண்ட மனிதன் இந்த நினைப்பிலே உருகி நிற்கும் போது, அந்த நினைப்பானது குருவை அவன் முன்கொண்டு வரும். குரு வருவதற்கு வேறு மார்க்கமேதும் கிடையாது.

ஓர் ஏற்புத் தன்மை இருந்தால் குருதானே இங்கே வருவார். எனவே, குருவைத் தேடி அலைய வேண்டியதில்லை.

தன்னை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உயரட்டும். தானாகவே அவனுடைய எண்ணம் உயர்நிலையில் பக்குவப்படட்டும். குரு தானாகவே வருவார்.

மனிதனுடைய எண்ணம் என்பது என்ன? அது பிரம்மத்தினுடைய சாயை தானே? இயக்கம் தானே எண்ணமாக, அறிவாக இருக்கிறது?

உணர்ந்த நிலையில் அறிவாகவும், மயக்க நிலையில் மனமாகவும் அதுவே குறிப்பிடப்படுகிறது. அது தானாக அமர்ந்த நிலையில் பிரம்மமாக உள்ளது. பக்குவப்பட்டவன் நினைத்தால் குருவர வேண்டியதுதானே? (Fraction demands and Totality supplies).

நம் முன்னோர்கள் செய்த தவப்பயனே குண்டலினி யோகம். அவ்வாறு குரு வரவேண்டியதைத் தடுப்பது எது?

ஏற்கனவே எண்ணியிருந்த எண்ணங்களால் உருவான ஒரு மேடு மத்தியிலே தடுக்கிறது. இதைக் கணித்து உணர்ந்து கொண்டு நல்லதிலேயே மனதை நிலைக்கச் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும்.

உங்களுடைய நல்ல கர்மத்தின் விளைவாகத் தான் நீங்கள் இந்த மனவளக்கலையை ஏற்று இருக்க முடியும்.

அது நீங்கள் நேரடியாகச் செய்த தவப்பயனாக இருக்கலாம்; அல்லது உங்களது பெற்றோர்களுடைய தவப்பயனால் உங்களுக்கு இந்த உணர்வு நிலை கிட்டியிருக்கலாம்.

பெற்றோர்கள் மூலமாகக் கிட்டும் போது அதை நமது தமிழகத்துப் பெரியவர்கள் "கருவில் திரு உடையார்" என்று ஒரே சொற்றொடரில் வர்ணித்தார்கள்.

இந்த வகையில் எனக்கு நல்ல குருவும் வந்தார்கள். சிக்கெனப் பிடித்துக் கொண்டேன்.

## பண்பு பண்பு பண்பு பண்பு

நான் வேறு துறையில் – நிர்வாகத் துறையில் – படித்திருந்தாலும் பணியிலிருந்திருந்தாலும் கூட இயல்பாகவே இது அமைந்தது.

பண்பு பற்றி ஞானக்களஞ்சியம் சொல்லுகின்ற போது.... (ஞானக் களஞ்சியத்தில் தங்க நெற்கதிர் போன்ற பாடல்.)

"சிந்தனையுடன் செயலும், செயலுடன் சிந்தனையும்

பந்தித்து நிற்கப் பழகுதல் நற்பண்பு." (ஞாக.பா.632)

சிந்தனை ஆற்றல்தான் மனிதனின் ஆறவது அறிவு ஆகும். ஐயறிவு விலங்குகள் வரை சீவ இனங்களுக்கு சிந்தனை ஆற்றல் இல்லை.

இயற்கையில் கிடைப்பதை உண்டு உயிர்த்து மாண்டு விடுகின்றன. மனிதனின் சிறப்பே அனுமானம் என்ற ஆறாவது அறிவு ஆகும்.

முன் அனுபவத்தை நினைவில் கொண்டு, தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு, எதிர்கால விளைவையும் அனுமானித்து செயல்படக் கூடியவன் மனிதன் மட்டுமே.

ஆனால் விலங்கினத்தின் வித்துத் தொடராக வந்த மனிதனில் பல பிறவிகளில் பெற்ற பழக்கப் பதிவுகள் காரணமாக, அறிவின் அலையாகிய, உயிரின் படர்க்கை நிலையாகிய மனிதன் வழியே வாழ்ந்து பழகிவிட்டான்.

அதனால் உருவத்தால் மனிதனாகவும் குணத்தால், மிருகப் பண்புகளையும் வெளிப்படுத்துகிறான்.

அதனால் தனி மனிதனுக்குக் கேடும், சமுதாயத்திற்குக் கேடும் விளையும். அமைதி நிலையில்தான் சிந்திக்க முடியும். அந்த அமைதியே மெய்ப்பொருள் நிலை. அதுவே மாறாத உண்மையும் ஆகும்.

ஆகவே சிந்தனையில் ஏற்படும் தெளிவு செயலூக்கத்தைக் கொடுக்கும். செயல் செய்வதால் வரும் விளைவு முன் அனுபவமாக அறிவிற்குப் புலனாகும்.

நல்ல மனிதர்களின் நற்பண்பு, சிந்தனையையும் செயலையும் ஒழுங்குபடுத்தி இணைத்துப் பழகுவதேயாகும்.

உடல், உயிர், மனம் ஆகிய மூன்றும் லயமான நிலையில் வாழ்க்கையில் தடுமாற்றம் தடமாற்றம் இல்லாமல் வாழ்ந்து மற்றவர்களுக்கும் வழிகாட்டுவார்கள்.

## உயர்ந்த பண்பு

உயர்ந்த பண்பு பற்றி ஞானக்களஞ்சியம் சொல்லுகின்ற போது......
(ஞானக் களஞ்சியத்தில் தங்க நெற்கதிர் போன்ற பாடல்)

"உடையிலே ஒழுக்கம், உள்ளத்தில் கருணை,

நடையில் கண்ணியம், நல்லோர் பண்பு" (ஞாக.பா.633)

ஒழுக்கம் என்றால், தனக்கோ – பிறருக்கோ. தற்காலத்திலே – பிற்காலத்திலோ, உடலுக்கோ, உயிர் உணர்ச்சிக்கோ, துன்ப விளைவு ஏற்படாத எண்ணம், சொல், செயல் ஆகும்.

உடை என்பது வெளி சீதோஷ்ண நிலை ஏற்றத் தாழ்வுகளை சமப்படுத்திக் கொள்வதற்காக உடலுக்கு உடுத்தப்படும் ஆடை ஆகும். உடைகளை உடுத்துவதில் ஒழுக்கம் காக்கப்பட வேண்டும்.

இறைநிலையின் தன்மை அன்பு ஆகும். அது இருப்பு, அதனைக் கருணையான செயல்கள் மூலமாகவே வெளிப்படுத்த முடியும்.

இறைநிலையின் ஒரு பகுதியாக உள்ள மனிதனின் உள்ளத்திலிருந்து எப்போதும் கருணையான எண்ணம், சொல், செயல்கள் வெளிப்பட வேண்டும்.

விலங்குகளைக் கால்களால் நடப்பதால் கால்நடை என்று சொல்லுகிறோம். மனிதனும் கால்களால்தான் நடக்கிறான். ஆனால் மனிதனைக் கால்நடை என்று சொல்வதில்லை.

மனிதனது எண்ணம் சொல் செயலின் வெளிப்பாடு நடத்தை எனப்படும். கௌரவமான முறையில் மற்றவர்கள் உயர்வாக மதிக்கத்தக்க வகையில் நடவடிக்கைகள் வெளிப்பட வேண்டும்.

மனிதனின் உயர்ந்த பண்பு ஒத்தும், உதவியும், இட்டுண்டு, தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்கக் கூடியதுமானதும் ஆகும். அத்தகைய பண்புகளை உடையவர்களே நல்லோர் எனப்படுவர்.

## நற்பழக்கம்

நற்பழக்கம் பற்றி ஞானக்களஞ்சியம் சொல்லுகின்ற போது.......

"பழக்கத்திற்கும் கூர்ந்த விளக்கத்திற்கும் இடையே

பாருலகில் மனிதரெல்லாம் போராடு கின்றார்.

பழகத்தை வளர்ந்தமக்கள் மாற்றுவது கடினம்.

பாலர்களின் நற்பழக்கம் பலன்விளைக்கும் எளிது" (ஞாக.பா.634)

புலன்கள் மூலமாக வெளியில் இருப்பவற்றோடு தொடர்பு கொள்ளும்போது ஏற்படும் அனுபோகமானது அனுபவமாகி விடுகிறது.

அனுபவம்தான் எண்ணம் மலர்வதற்குக் காரணமாக உள்ளது. அந்த அனுபவமானது உடல் செல்களில் விரிவு சுருக்கமாக, மூளையில் எண்ணமாக, உடல் முழுவதுமுள்ள ஜீவகாந்தக் களத்தில் பிரதிபலிப்பாக, கருமையத்தில் தரமாக, பிரபஞ்ச காந்தக் களத்தில் சமுதாய வினையாகப் பதிவாகி பிரதிபலிக்கிறது.

பொருளோடு - பொருள், அலையோடு – அலை, பொருளோடு அலை சேரும்போது மூன்றாவதாக வரும் விளைவை. மனம் இன்பம் துன்பம் என்ற உணர்வாகக் கணிக்கிறது.

மீண்டும் மீண்டும் எண்ணம் வரும்போது சொல்லாக, செயலாக ஊக்கம் பெற்று விளைவு வருகிறது.

அதுவே பழக்கமாகி விடுகிறது. பழக்கத்தின் வழியே உணர்ச்சி வயப்பட்ட நிலையில் செயலாற்றும்போது விளைவு துன்பமாக வருவதை விளங்கிக் கொள்கிறான் மனிதன்.துன்பத்தைத் தவிர்த்து வாழ்வதற்கான விளக்கத்தையும் விளங்கிக் கொள்கிறான்.

ஆனால் பல பிறவிகளில் தொடர்ந்து வந்த பழக்கப் பதிவுகளிலிருந்து விடுபட முடியாமலும், பெற்ற விளக்கத்தை மறக்க முடியாமலும் நில உலக மக்கள் அனைவரும் போராடிக் கொண்டு இருக்கிறார்கள்.

“ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது” என்ற ஒரு பழமொழி உள்ளது. பிறந்ததிலிருந்து பின்பற்றி வாழ்ந்து கொண்டுள்ள மக்கள், பின் வளர்ந்த போது மாற்றிக் கொள்வது கடினமானதுதான்.

ஆனால் சிறார்களாக, பாலர்களாக இருக்கும்போது நல்ல பழக்க வழக்கங்களையும், பண்பு நலன்களையும் பழகிக் கொள்வார்களேயானால், அது எளிதாகவும் பலனிக்க கூடியதாகவும் இருக்கும்.

## பாரம்பரியப் பண்பு

பாரம்பரியப் பண்பைப் பற்றி வள்ளுவர் சொல்லுகின்ற போது,

“நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்

உண்மை அறிவே மிகும்” (373)

ஒருவன் நுட்பமான நூல் பலவற்றைக் கற்றாலும் ஊழுக்கு ஏற்றவாறு அவனுக்கு உள்ளதாகும் அறிவே மேம்பட்டுத் தோன்றும்.

பேதை ஆக்குவதற்கு உரிய விதி நமக்கு இருந்தால், நுட்பமான கருத்துக்களை உடைய பல நூல்களைக் கற்றாலும் இயல்பான அறிவே இருக்கும்.

## தெய்வ அறிவு

தெய்வ அறிவு என்பது பாரம்பரியமான அறிவு. அந்த வகையில் அந்தச் சிறப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்நேரத்தில் ஒன்றை

நினைவில் கொள்ள வேண்டும். (ஞானக் களஞ்சியத்தில் தங்க நெற்கதிர் போன்ற பாடல்.)

"தெய்வ அறிவே திருந்திய அறிவாம்!

உய்யும் நல்வழி உள்ளுணர் தவமே!

செய்யும் வினைகளைச் சீரமைத்திட,

ஐயமில்லை. அறும் பிறவித் தொடர்" (ஞாக. ப.1205)

விருப்பு – வெறுப்பு, இன்பம் – துன்பம், நல்லது – கெட்டது என்ற இரட்டைகள் எல்லாம் மனித மனத்திற்குத் தான் உண்டு. மனம் கடந்து அறிவு என்ற நிலையில் இரட்டைகள் அற்ற நிலையாகும்.

சிற்றறிவைப் பேரறிவில் லயமாக்கும் தெய்வீக நிலையே திருத்தம் பெற்ற அறிவு ஆகும். அதற்கு அகநோக்கப் பயிற்சியின் மூலம், உண்மை உணர்வை உள்ளுணர்வாகப் பெற வேண்டும்.

அகநோக்குப் பயிற்சியைத் தவம் என்கிறோம். தவம் என்றால் தன்னை அறிதல் ஆகும். தன் நிலை அறிதல் ஆகும்.

முதலில் மனிதனாக இருக்கும் மனதை அறிதல், பின்னர் மனதில் மறுமுனையாகிய அறிவை அறிதல் ஆகும். அந்த தெளிவுதான் தெய்வமாகவும் உள்ளது என்பதை உணர்தல். அந்நிலையே எல்லாவற்றையும் அறியும் முழுமை பெற்ற அறிவாகும்.

மனிதன் என்ற நிலையில் பழக்கத்தின் வழியே செயல்படுத்திய வினைகளை ஆராய்ந்து, மாற்றிக் கொள்ள வேண்டியவைகளை மாற்றிக் கொண்டு. ஏற்றுக் கொள்ள வேண்டியவைகளை ஏற்றுக் கொள்ளும் திறனையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அந்நிலையில ஆன்மா தூய்மை பெறுவதால், தெய்வீக அறிவின் காரணமாகப் பிறவித் தொடர் அறுபடும்.

ஒரு மனிதன் உயர்வதற்கு அடிப்படையாக அவன் ஒரு சிறந்த வித்தாக இருக்க வேண்டும். சார்ந்தவன் சார்ந்த வண்ணம் உயர்வதாலே சார்ந்தவர்கள் சிறப்புடையவர்களாக இருக்க வேண்டும்.

## நல்லோர் தந்த பரிசு

நல்லோர் தந்த பரிசு பற்றி வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம் சொல்கிறது (ஞானக் களஞ்சியத்தில் தங்க நெற்கதிர் போன்ற பாடல்.)

"வாழ்வை வளப்படுத்தும்

வழக்க பழக்கங்கள் எனும்

ஒழுக்கங்கள் எல்லாம்,

ஆழ்ந்த சிந்தனையாளர்

அன்பினால் உலகுக்கு

அளித்த பரிசாகும்."(ஞாக.பா.638)

புலன்கள் மூலம் பெறும் அனுபோக அனுபவங்கள் எல்லாம் பழக்கங்கள் ஆகிவிடுகின்றன.

புலன்களும் மனமும் பழகிக் கொள்வதால் பழக்கம் எனப்படுகிறது. திரும்பத் திரும்பச் செய்யும் போது பழக்கமே வழக்கமாகி விடுகிறது.

அந்தப் பழக்க வழக்கங்கள்தான் ஒழுக்கம் ஆகிறது. ஆழ்ந்து சிந்தித்த அறிஞர் பெருமக்களின் அறிவின் தெளிவில் மலர்ந்தவற்றை உலக மக்களுக்கு பரிசாக அளித்துள்ளனர்.

எந்தெந்தப் பழக்கங்கள் வாழ்வை வளமாக்க கூடியது. எந்தெந்தப் பழக்கங்கள் தவிர்க்கப்பட வேண்டியவை என்று அந்தக் காலத்தில் ஆங்காங்கே வாழ்ந்த ஆழ்ந்த சிந்தனையாளர்கள் தெரிவித்த கருத்துக்கள் ஒழுக்க பழக்கங்கள் ஆகும்.

ஒரு மனிதனின் அறிவில் தெளிவு ஏற்படுமேயானால், அது ஒட்டுமொத்த உலக மக்களுக்குமே சொந்தமானது என்ற அவர்களது அன்பின் எழுச்சியினால் மலர்ச்சி பெற்ற கருணையானது உலக மக்களுக்கு ஒழுக்க பழக்கங்கள் என்ற வகையில் கட்டிய பரிசு ஆகும்.

நல்வர்களாக சிந்தனையாளர்கள் வழங்கிய ஒழுக்க பழக்கங்கள் வாழ்வை வளப்படுத்தக் கூடியவை ஆகும்.

அந்த வகையிலே என்னைச் சார்ந்தவர்கள் எல்லாம் சிறப்பைச் செய்திருக்கிறார்கள்.

சான்றாக, எனக்கு சின்ன வயதிலே ஒரு சுயமரியாதை உணர்வு ஏற்பட்டது. எப்படி என்று சொன்னால் எனது தாயார் இயல்பாகவே என்னை அவன், இவன் என்று சொல்லமாட்டார். அவர் இவர் என்று தான் சொல்லுவார்.

அதுபோல ஆசிரியர்களும் அப்படித்தான். எல்லா மாணவர்களையும் அவன், இவன் என்று அழைப்பதில்லை. சின்ன வயதிலே எந்த விதச் செருக்கும் உண்டாகவில்லை. அதற்கு மாறாக, ஒரு பெருமிதம் ஏற்பட்டது.

ஆகவே தன்மானத்தோடும் சுய மரியாதையோடும் இருப்பதற்கு அடிப்படையிலே என்னை அறியாமலே ஒரு பண்பாடு ஏற்பட்டது.

ஆகவே ஒரு மனிதனை உருவாக்குவதற்கு அந்த வித்தினைச் சார்ந்தவர்கள், சிறந்தவர்களாக. சார்ந்த வண்ணம் இருக்கக் கூடியவர்களாக இருந்தார்கள்.

## ஆசிரியப் பெருமக்கள்

அதுபோல நான் படிக்கிற காலத்தில் எனது ஆசிரியப் பெருமக்கள் மிகச்சிறந்தவர்களாக இருந்தார்கள். ஆசிரியர் பற்றி வேதாத்திரியத்தின் ஞானக் களஞ்சியம் சொல்கிறது..........

“வாழ வழிகாட்டிப் பயிற்சியூட்டி

வாழவைக்கும் சிறந்தசெயல் கல்வியாகும்.

வாழ்வினையே கல்வி போதனைக்கு நல்கி,

வாழும் உணர் நிலைபெற்றோர் ஆசான் ஆவார்.” (ஞாக.பா.476)

பாடங்களைக் கற்பிப்பவர்கள் ஆசிரியர்கள். கலைகளைக் கற்பிப்பவர்கள் ஆசான்கள். அறிவையும் இறைநிலையையும் உணர்ந்து மற்றவர்களுக்கும் உணர்த்துபவர்கள் குருமார்கள்.

மனித அறிவை உயர்த்திக் கொள்வதற்கான சாதனம் கல்வி ஆகும். எழுத்துக் கல்வி, தொழில் கல்வி, பண்புக் கல்வி, இயற்கைத் தத்துவ

அறிவுக்கல்வி முதலிய நால்வகைக் கல்வியும் மனிதன் இனிமையாக வாழ்வதற்கு அவசியமாகும்.

மனிதனை வாழ வைப்பதற்கான சிறப்பான செயல் கல்வியேயாகும். தங்களது வாழ்க்கையில், தாங்கள் அறிந்த, தெளிந்த, அனுபவித்த அறிவின் உயர்வு அனைத்தையும் மற்றவர்களுக்கு போதிப்பதற்காகத் தங்களது வாழ்க்கையையே அர்ப்பணித்துக கொண்டு வாழும் உயர்வான நிலையைப் பெற்றவர்கள் ஆசான்கள் ஆவர்.


தமக்கு கல்வி மற்றும் கலைகளைக் கற்றுக் கொடுத்த ஆசிரியரை உயர்வாகக் கூறுவதற்காகப் பயன்படுத்தப்படும் சொல் ஆசான் ஆகும்.

இத்தகைய ஆசான்கள் போல சார்ந்தவர்கள் வண்ணமாக பெரியோர்களை துணைக் கொள்ளும்போது அவர்களின் நற்பண்புகள் எல்லாம் என்னைச் சார்ந்திருக்கின்றன.

சிந்தித்துப் பார்க்கிற சமயத்திலே ஒரு மனிதன் பிறந்த குடும்பம்; அவன் சார்ந்திருக்கிற மனிதர்கள்; அவனது மிகச்சிறந்த ஆசிரியர்கள்; அவன் படித்த புத்தகங்கள். இவைகள்தான் ஒரு மனிதனை உருவாக்குகின்றன என்பதை அறியமுடிகிறது.

நமது புலவர் பேராசிரியர் தியாகராஜன் அய்யா இருந்தார். புலவர் என்னுடனும் என் குடும்பத்தினருடனும் இருபது ஆண்டுகளுக்கு மேலாக பழகி உயிரில் கலந்த உறவாக இருந்தார்.

அவர்களைப் போன்ற அருட்தந்தையின் முதன்மைச் சீடர்கள், மூத்த பேராசிரியர்கள், துறவிகள், சாதுக்கள் எல்லாம் என்னை உயர்த்தினார்கள். இதுபோன்ற மிகச்சிறந்த அறிஞர் கூட்டம் என்னைச் சூழ்ந்திருந்தது.




மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது போல இந்த அறிஞர்களுடைய செல்வாக்கு எனக்கு மிகுதியாக இருந்தது.

அது எனக்குத் தமிழ்மீது ஆர்வமும், பற்றும் ஏற்படுத்தியது. நான் மிகப்பெரிய தமிழ்த்துறையில் படித்தவனில்லை.

இருந்தாலும் தமிழின் மீது கொண்ட ஆர்வத்தின் காரணமாக இந்தப் பெருமையெல்லாம் கிடைத்திருக்கிறது எனக் கருதுகிறேன். அதிலும் இதில் புலவர் தியாகராஜனார் பங்கு மிகச் சிறப்பானது.

மனவளக்கலையில் பயிற்சி பெற்ற சமயத்திலேயே 1854 ஞானக் களஞ்சியப் பாடல்களையும் முடிந்தவரை படித்துவிட்டேன்.

## ஞானக்களஞ்சியம் ஒரு பன்முக ஆவணம்.

ஞானக்களஞ்சியம் கவிதைத் தொகுப்பு – வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்– பன்முக ஆவணமாகத் திகழ்கிறது.

“ஞானக்களஞ்சியம்” வேதாத்திரியத்தின் தத்துவ விளக்கங்கள், எளிய மொழிநடை, இலக்கியப் பண்புகள், சுருங்கச் சொல்லல் என்ற பல நிலைகளில் நம்மைக் கவருகின்றது.

பொருளாதாரம், அரசியல், கல்வி, சமுதாயம் முதலிய அன்றாட வாழ்க்கை நிகழ்வுகள் பற்றிய தம் அனுபவங்களை அதன் குறை நிறைகளோடு பதிவு செய்யும் போது வேதாத்திரியாரின் சமூக அக்கறை வெளிப்படுகிறது.

மெய்ஞ்ஞான விஞ்ஞான விளக்கங்களில் சித்தர்களின் முத்திரையை இனம் காண முடிகிறது.

அதற்குப் பிறகு வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம் எனக்குப் பெரும் துணையாக இருந்தது.

திருக்குறள் “எல்லாப் பொருளும் இதன்பால் உள” என்று பாராட்டப்படும் சிறப்புடையது.

ஞானக்களஞ்சியம் நமது சமகால வாழ்க்கை பற்றிய அறிவிற்கும் தெளிவிற்கும் ஒரு கலைக்களஞ்சியமாக எல்லாப் பொருளும் இதன்பால் உள என்று போற்றத்தக்க நூலாக உள்ளது.

உலகப் பொதுமறைக்கு நிகராக வேறு ஒன்றும் இல்லை என்பதை நன்றாகக் கண்டு கொண்டேன்.

வேதாத்திரியத்தின் பெருமைகளை எல்லாம் நீங்கள் நன்றாக அறிவீர்கள். திரும்பத் திரும்பச் சொன்னாலும் பெருமை தரக்கூடிய வாசகம் இது.

“வேதாத்திரி தன்னை உலகினுக்கே தந்து

வான்புகழ் கொண்ட தமிழ்நாடு”

நாம் வேதாத்திரியை உலகிற்குத் தந்தோம்; அவரிடம் இருந்து புகழை நாம் எடுத்துக் கொண்டோம்.

ஞானக்களஞ்சியம் தமிழகத்தில் தோன்றினாலும் அது தமிழனுக்கு மட்டும் படைக்கப்பட்டது அல்ல. அது உலகத்திற்கு மானுடத்திற்காகப் படைக்கப் பட்டது.

வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம் ஒரு
படைப்பிலக்கியமாகவோ- பக்தி இலக்கியமாகவோ -கருத்தை

திணிக்கும் கசாய இலக்கியமாகவோ இல்லாமல்- ஒரு பட்டறிவு இலக்கியமாக இருக்கிறது.

## திசைகாட்டும் கருவி ஞானக்களஞ்சியம்

வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம் – ஒரு தனிமனிதனின் குரல் அல்ல. ஓர் உயர்ந்த நாகரிகத்தின் – ஒட்டுமொத்த தெளிவின் திரள்.

வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம் – ஒரு படைப்பு முயற்சி அல்ல. பரிணாம வளர்ச்சி. மிக உயர்ந்த மீமிசையே – பூமிக்கு குடையாக முடியும். மிக உயர்ந்த உன்னதமே –உலகுக்கு கொடையாக முடியும்.

வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம் –நாம் எதற்காக இன்றும் கொண்டாடுகிறோம். காரணம் –வேதாத்திரியம் இன்றும் தேவைப்படுகிறது.

தலைகுனியச் செய்யும்- தலைப்புச் செய்திகள். தினந்தோறும் வானிலை அறிக்கை போல வாசிக்கப்படுகிற வக்கிரங்கள். சிறைவாசலில் நின்று சிரித்து கையசைக்கும் –சில்லரை மற்றும் தேசிய கயவர்கள்.

குற்றங்களை விடவும் –கொடுமையாய் வலிக்கிறது. குற்ற உணர்வு –முற்றிலும் அற்றுப்போன அவலநிலை. சுற்றும் உலகம் சுருங்கிவிட்டது.

ஆனால் –வீடும் வீதியும் விலகிச் செல்கிறது. பல வகையிலும் குழம்பிக் கிடக்கிறது –வாழ்க்கை.

இருந்தாலும் குழைத்துப் போட- ஒரு மருந்து கையில் இருக்கிறது. எப்போதும் –இது நாட்டு மருந்து.

இந்த நாட்டு மருந்து எத்தனை ஆண்டுகாலம் ஆன பின்னாலும் – காலாவதி ஆகாத கைமருந்து.

உலகப் பொதுமறை "வேதாத்திரியத்தின் ஞானக் களஞ்சியம் - ஏன் உலக பொதுமறை என்று சொல்கிறார்கள்.

தமிழில் -மறைப்பதற்கு எதுவுமில்லை. பொது மறை என்றாலும் கூட -எதிர்மறை தான்.

உண்மையில் பொதுமறை என்பதே -பொருத்தமற்றது. பொதுவான எதுவும் மறையாக, அதாவது மறைவாக இருக்கமுடியாது.

மறை என்ற சொல்லின் -பொருளும் சொற்பொருள் ஆக்கமும் மறைதல், மறைத்தல், ஒளிதல், ஒளித்தல், கமுக்கம், ரகசியம் என்ற அடிப்படைகளில் உருவாகி நிலை பெற்றது.

வெளிப்படையான, சமயச்சார்பற்ற- "வேதாத்திரியத்தின் ஞானக் களஞ்சியம்" பொதுமறை என்பதற்கு பதிலாக - உலகப்பொதுமறை என்று அழைப்பதே முறையாக இருக்கும்.

எனவே வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம் - உலகப்பொதுமுறை என அழைப்பதே பொருத்தம்.

திசைகாட்டும் கருவி -திசைகளின் தேர்வு தெளிவாய் இருந்தால் வழிகள் பிறக்கும்; வாசல்கள் திறக்கும். வழிகாட்டிகள் உடன் வருபவர்கள் -அவர்கள் யோசிக்க விடுவதில்லை.

ஆனால்- திசைகாட்டும் கருவி தீர்க்கமானது. தெற்கு -வடக்கை தெரிவிக்கும். தேர்ந்தெடுக்கவேண்டியது -நாம் தான். திசை என்பது திக்கு.

வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம் - காட்டும் திசை - தெளிவானது. தீர்க்கமானது. அறத்தின் திசையாகவும்- வேதாத்திரியம் உள்ளது.

அறம் நோக்கமாகவும், பயன்பாடாகவும், வழிமுறையாகவும் இருக்கிறது. அறநோக்கம், அறவழி, அறப்பயன். அதுவே அறத்தை பொருளை, இன்பத்தை வழி நடத்துகிறது.

பிறர்க்கோ-தனக்கோ-தற்காலத்திலோ-பிற்காலத்திலே அறிவிற்கோ- உடல் உணர்ச்சிக்கோ துன்பம் எழாத அளவோடும்- முறையோடும்-

வாழ்க்கையைத் துய்க்கின்ற ஒழுக்கமும், முறையோடும் வாழ்க்கையைத் துய்க்கின்ற ஒழுக்கமும்- பிறர்க்கு ஒத்துதவி வாழ்கின்ற ஈகையையும்- தனது உழைப்பைக் கொண்டே தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்ற கடமையும் -இணைந்த தொகுப்புக் கருத்து அறம் ஆகும்.

## அறிவில் முழுமை

அறிவில் முழுமை எய்த ஞானக்களஞ்சியம் சொல்கிறது.... (ஞானக் களஞ்சியத்தில் தங்க நெற்கதிர் போன்ற பாடல்.)

"ஒழுக்கம், கடமை, ஈகை என்ற மூன்றும்

ஒன்றிணைந்த உயர்நெறியே அறம் என்றாகும்.

ஒழுக்கத்தில் கடமை, ஈகை இரண்டும்

உள்ளடங்கி இருப்பதனை உற்றுப் பாரீர்!

ஒழுக்கமே வாழ்வில் என்றும் வெற்றி நல்கும்.

உயர்மக்கள் செல்வமும் அளிக்கும். மேலும்,

ஒழுக்கமே இறையுணர்வில் ஒளியுண் டாக்கி,

உயர்த்தி, அறிவில் முழுமை எய்தவைக்கும்." (ஞாக.பா.453)

ஒழுக்கம் என்பது துன்புறுத்தாமை ஆகும். கடமை என்பது நன்றி பாராட்டி அடிப்படையாக ஒருவர் ஆற்றிட வேண்டிய செயல் ஆகும்.

ஈகை என்பது பிற உயிர் துன்பம் நீக்குவது ஆகும். ஒழுக்கம், கடமை, ஈகை என்ற மூன்றும் ஒன்றிணைந்த உயர் நெறி அறம் என்படுகிறது,

கடமைகளைக் கடமைக்காகவே செய்வதில் நன்றியுணர்வும், விளைவறிந்த விழிப்பு நிலையும் இணைந்து செயல்படுவதால் துன்ப விளைவு வராது.

அதுபோல பிற உயிர் துன்பம் நீக்கும் ஈகையான செயல்களிலும் துன்ப விளைவு இல்லை.

ஆகவே ஒழுக்கத்தில் கடமை ஈகை என்ற இரண்டும் உள்ளடங்கி இருப்பதை அறியலாம்.

வாழ்க்கையில் எப்போதும் வெற்றியும், மக்கள் செல்வத்தையும் அளிக்க வல்லது ஒழுக்கமேயாகும்.

மனிதப் பிறவியின் நோக்கமாகிய இறையுணர்விற்கு ஒளி உண்டாக்கி வழியைக் காட்டி அறிவில் உயர்வு பெற்று முழுமையைப் பெற உதவியாக இருப்பது ஒழுக்கமே ஆகும்.

## மழை வாழ்த்து

ஏரி, குளம், கிணறு, ஆறு எல்லாம் நிரம்பி வழிய. மாரி அளவாய் பொழிக. மக்கள் வளமாய் வாழ்க, நீர் பொருளாதாரத்தை- உலகிற்கே முதலில் அறிமுகப்படுத்தியது வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம் தான்.

"ஏரி, குளம், கிணறு, ஆறு,

எல்லாம் நிரம்பி வழிய,

மாரி அளவாய் பொழிக!

மக்கள் வளமாய் வாழ்க!" (ஞாக.பா.1854)

தனிமனிதன் இனிமையாக வாழ வேண்டுமானல், சமுதாயம் வளமாக இருக்க வேண்டும். சமுதாயம் வளமாக இருக்க வேண்டுமானல் தனி மனிதனின் வாழ்வியல் தேவைகள் காலத்தோடும், சரியாகவும் முறையாகவும் கிட்ட வேண்டும்.

ஆகவே ஒன்றைச் சார்ந்து ஒன்றாக எல்லாமே இயற்கை நியதிப்படி நடந்து கொண்டுள்ளன.

கடல்நீர் ஆவியாகி மேகமாகி, குளிர்ந்த மேகமும் வெப்பமான மேகமும் ஒன்றிணையும்போது ஏற்படும் விளைவை மழை என்கிறோம்.

பூமியின் தற்சுழற்சி காரணமாக பருவநிலைகளில் மாறுபாடுகள் ஏற்படுகின்றன. அதற்கேற்ப மழை பொழிகிறது.

மழைநீர் பூமியில் விழுந்தால்தான் பயிர் வகைகள் செழித்துப் பெருகி உயிர் வகைகள் இனிமையாக வாழ முடியும்.

மழை அல்லாத காலங்களில் பயன்படுத்துவதற்காக மனித அறிவைக் கொண்டு தேக்கங்களை ஏற்படுத்தியுள்ளோம். அவை ஏரி, குளம், கிணறு என்கிறோம்.

ஆறுகள் மலைகளில் ஆங்காங்கே தோன்றி உலகம் முழுவதும் ஓடி கடல் நீரில் கலந்துவிடுகிறது. அவற்றையும் அணைகள் கட்டித் தேக்கிப் பயன்படுத்துகிறோம்.

ஆகவே மழையானது அளவாகப் பொழிவது போலவும் ஏரி, குளம், கிணறு, ஆறு ஆகிய அனைத்தும் நிரம்பி வழிவது போலவும் எண்ணி, மக்கள் வாழ்வியல் வளங்கள் அனைத்தையும் முறையாகப் பெற்று அனுபவித்து வாழவேண்டும் என்று மனநிறைவுடன் வாழ்த்துவோம்.

## முதலீடு செய்யும் முதல் அறநூல்- ஞானக்களஞ்சியம்

வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் – “வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்” தெளிவுபடுத்துகிறது.

மகரிசியின் அறம், சமயம் சாராத அறம். இடம், காலம், வலிமை சார்ந்த நடைமுறை அறம். மனித வளத்தில் -முதலீடு செய்யும் முதல் அறநூல்.

வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம் - காட்டும்- அடிப்படைத் திசை- அறம். அந்த அடிப்படைக்கு அடிப்படையாய் -அடையாளம் பெறுவது மனச்சான்று.

அறத்தொண்டே என் வினை என்கிறது ஞானக்களஞ்சியம்.....

“என்செய்வேன்! என் உளத்தின் இன்ப ஊற்றில்

யான் திளைத்து மிதந்திருந்தேன்! காலம் காணேன்!

மின்னலைப்போல் சிறியவலி பின் கழுத்தில்

மெதுவாய்க்கண் விழித்தேன். கனவு போச்சு!


இன்னுமென்ன வினையிருப்பு! எண்ணங்கொண்டே

யான்துருவித் துருவி ஆராயந்து பார்த்தேன்!

பின்னலின்றிப் பிழையின்றி வாழும் மட்டும்

பேரறிவில் அறத் தொண்டேன் வினையாய்த் தேர்ந்தேன்”
(ஞாக.பா.724)

நான் என்ன செய்வது? காலமும் நேரமும் தெரியாத நிலையில், மனம் விரிந்த நிலையினால், இன்ப ஊற்றான இறைநிலை இணைப்பில் கலந்து திளைத்து மிதந்து கொண்டிருந்தேன்.



அச்சமயம் பின்கழுத்தில் சிறி வலியானது மின்னலைப் போல வந்தது. மெதுவாகக் கண்களை விழித்துப் பார்த்தேன். எனது கனவு கலைந்து விட்டது.

இன்னும் என்னுடைய கழிக்கப்பட வேண்டிய வினையின் இருப்பு என்ன? என்ற எண்ணம் ஏற்பட்டு, நுணுக்கமாகத் துருவித் துருவி ஆராய்ந்து பார்த்தேன்.

வாழ்வியல் சிக்கல்களின்றி, தவறுகள் இன்றி வாழ்கிற காலம் மட்டும் பேரறிவு நிலையிலிருந்து அறத்தொண்டு செய்ய வேண்டும் என்பதை என் வினையாகத் தெரிந்து கொண்டேன் என்கிறார் சற்குரு.

அச்சம் சார்ந்த அறம் -அறமல்ல. பயன், புகழ் நோக்கும் அறம் உண்மையில் அறம் அல்ல. மனநலம் காக்க மருந்தொன்று உண்டு என்றால்- அது தினம் ஒரு வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம் - படித்து உணர்வது தான்.

அதனால் தான் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் மிகப் பெருமையாகப் பேசுகிறார்:



“His Holiness Vethathiri Maharishi was a seer and a SOCIAL REFORMER who propagated the vision of world peace through cultivation of peace and harmony from Individual to family and ultimately from family to society for the Positive transformation of our planet.”

வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியத்தின் பெருமையைக் கேட்டுக் கேட்டு அந்தத் ஞானக்களஞ்சியமே எனக்கு உயிர் மூச்சானது.

என்னைச் செதுக்கிய நூல் என்று பார்க்கும்போது வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம் ஒன்றை முழுமையாகப் படித்துவிட்டாலே அத்தனை நூல்களையும் படித்ததற்குச் சமம் என அறிந்து கொண்டேன். புரிந்து கொண்டேன். உணர்ந்து கொண்டேன்.

சில ஆண்டுகளுக்குமுன் ‘தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம் சார்பாக மூன்று நாள் கருத்தரங்கம் நடத்தினோம். அது ‘உலக அரங்கிலே வேதாத்திரிய சிந்தனைகள்’ என்ற தலைப்பிலே நடைபெற்றது.

அதில் மார்க்கஸ் அரிஸ்டாட்டில், பிளேட்டோ, அரேலியஸ், சாக்ரடீஸ், சுக்கிரநீதி, பெரியார், கீதை, நாராயண குரு எனப் பல அறிஞர்களுடன் அறநூல்களுடன் எல்லாம் ஒப்பீடு செய்து அறிஞர்கள் பேசினார்கள்.

அவர்கள் பேசியதைக் கேட்டபொழுது, எல்லாவற்றிலும் வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியமே விஞ்சி நிற்கிறது என்பதை உணர முடிந்தது.

வேதாத்திரி ஒருவரைப் படித்துவிட்டாலே, ஞானக்களஞ்சியத்தின் 1854 பாடல்களைப் படித்து விட்டாலே ஆயிரக்கணக்கானப் புத்தகங்களைப் படித்ததற்குச் சமம்.

இதைவிடச் சொல்வதற்கு ஒன்றில்லை. “எல்லாப் பொருளும் இதன்பால் உள” என்று ஞானக்களஞ்சியத்தை எனது உயிர் மூச்சாகக் கொண்டேன்.

இதன் தாக்கம்தான் எம்முடைய “கிழக்கும் மேற்கும்” என்ற புத்தகம். அருட்தந்தையின் தத்துவத்தோடு உலக தத்துவவாதிகளின் தத்துவங்களை ஒப்பாய்வு செய்து எழுதப்பட்ட சிறப்பான புத்தகமாக அமைந்தது.


வேதாத்திரி மகரிசி ஒருவர்தான் அக உலகை அளந்தவர் என நண்பர் ஒருவர் பாராட்டினார்.

உங்கள் எல்லோருக்கும் வாமன அவதாரத்தைப் பற்றித் தெரியும். வாமன அவதாரத்தில் திருமால் குள்ள வடிவினனாக வந்து மாவலி சக்கரவர்த்தியிடம் மூன்று அடி நிலம் கேட்கிறார்.

குள்ளம் என்றால் 1 1/2 அடி வடிவினனாக வந்தார். மகாபலியும் குள்ளமானவன் என்பதனாலே மூன்றடியைக் கொடுத்தார்.

திருமால் விசுவரூபம் எடுத்து ஓர் அடியால் இந்தப் பரந்த மண்ணுலகையும் இரண்டாவது அடியால் விண்ணுலகத்தையும்

அளந்தார். மூன்றாவது அடியை அவன் தலையில் வைத்து மகாபலியின் அகந்தையை அழித்தார்.




திருமால் புற உலகை அளந்தார்; வேதாத்திரியம் (ஞானக்களஞ்சிய பாடல்களினால்) அக உலகை அளந்தார்.

வேதாத்திரியார் மனதால் அளந்தார், திருமால் காலடியால் அளந்தார். திருமால் புறவுலகை அளந்தார், வேதாத்திரியார் அகவுலகை அளந்தார்.

இரண்டு பேரும் மானுடம் உயர மேம்பட அளந்தனர். திருமாலும் வேதாத்திரியாரும் ஒருவரே என எண்ணத் தோன்றுகிறது. அந்த வகையில் அக உலகை அளந்த வேதாத்திரியாரின் மீது எனக்கு ஓர் உயிர்ப்பு ஏற்பட்டது. அது உயிர் மூச்சாக இருந்தது.

வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியத்தைப் படித்தாலே போதும், நம்முடைய வாழ்க்கை செம்மையாகும் என்பதை நான் அனுபவத்தால் உணர்ந்தேன்.

அனுபவங்கள்தான் வாழ்க்கையில் வேதாத்திரியத்தை மிகப்பெரியதாகக் காட்டின.

முதலில் மனவளக்கலைப் பயிற்சி எடுக்கின்ற காலத்திலே வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியத்தின் பெருமை அவ்வளவு பெரியதாகத் தெரியவில்லை.

வாழ்க்கையில் சிக்கல்களும் பிரச்சினைகளும் சோதனைகளும் வரும்பொழுது தான் வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியத்தின் அருமைகளை பெருமைகளை உணர முடிந்தது.

வேதாத்திரயார் தாம் வாழ்ந்த காலத்தில் மட்டுமன்று, நாம் வாழ்கின்ற காலத்திலும் இங்கு இருக்கக்கூடிய நிகழ்காலச் சிக்கல்களுக்கும் எதிர்காலச் சிக்கல்களுக்கும் தீர்வு காண்பவர்.

வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியத்தின் பாடல்களைப் படிப்பது இலக்கியச் சுவைக்காகவோ, இன்ப நலத்திற்காகவோ மட்டும் இல்லை.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்

தெய்வத்துள் வைக்கப் படும்.”

என்கிற நிலைக்கு உயர்த்தப்பட வேண்டும் எனச் சொன்னால் வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியத்தின் ஒன்றைப் படித்தாலே போதும் என்ற உணர்வோடு ஞானக்களஞ்சியத்தின் மீது எனக்கு ஈடுபாடு ஏற்பட்டது.


வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியத்தின் இல்லாத பொருள் ஒன்றுமில்லை எனக் கண்டு கொண்டேன்.

அதுபோல வாழ்க்கையில் பிரச்சினை என்று வரும் பொழுது (எனது அனுபவத்தைச் சொல்கிறேன்) வேதாத்திரியத்தின் ஞானக் களஞ்சியத்தினைப் புரட்டிப் பார்ப்பேன்; அதில் தீர்வு இருக்கும்.

எனக்கே வியப்பாக இருக்கும். இது மூட நம்பிக்கையாகக் கூட இருக்கட்டும். ஆனால் இந்த வகையில் தீர்வு என்ன என்பதைக் கண்டு பிடித்திருக்கிறேன்.

## வாசிப்பது சுகமே

மகாத்மா காந்தி அவர்களை மாற்றியது எல்லாம் புத்தகங்கள்தான். ஜான் ரஸ்கின் எழுதிய Unto this lost என்ற புத்தகமும், அவர் பார்த்த அரிச்சந்திர நாடகமும் தான் காந்தியடிகளை மகாத்மா ஆக்கின. விவேகானந்தரின் ஒரணா புத்தகம்தான் சின்னு என்பவரை சுவாமி சித்பவானந்தராக உயர்த்தியது



காந்தி அடிகள் வாழ்க்கையிலே மிகப்பெரிய திருப்பு முனைக்குக் காரணமாக இருந்தது புத்தகம்தான். காந்தி அடிகள் சொல்கிறார்: “பிரச்சினைகள், துன்பங்கள் வரும் போதெல்லாம் என்னை மாற்றியது கீதை தான். எனது பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வைக் கீதையில் காண்பேன்.”

அதுபோல என்னுடைய வாழ்க்கையில் பிரச்சினைகள், துன்பங்கள் முன் வந்த பொழுது வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியமே முன்னின்றது.

மிகச்சிறந்த புத்தகம் நம் கையில் இருக்குமானால் அது நம்மை உருவாக்குகிறது. சில புத்தகங்களை நாம் படித்திருக்கிறோம். ஆனால் அவற்றின் பெருமையை உணர்ந்திருக்க மாட்டோம்.

மகத்தான வாழ்க்கைக்குப் புத்தகங்களைப் படிப்பது மிகப்பெரிய இரகசியமாகும். பயனுள்ள ஒன்றைப் படிப்பதன் மூலம் நம் அறிவைப் பெருக்கிக் கொள்ள முடியும். சுய முன்னேறத்துக்குச் சுலபமான வழி. தினமும் வாசிப்பதே.

பல இயல்பு வாய்ந்த உறவினர்கள், நண்பர்கள் தொடர்பைவிடத் தேர்ந்தெடுக்கப்பட்ட சில நூல்களின் உறவு நமக்கு பெரிய பயன் அளிக்கும். நம்மை மேன்மையடைச் செய்யும் ஒரே நண்பன் புத்தகம்தான்.

சில நூல்கள் படித்து அப்படியே மகிழ்வதற்கு மட்டும் இருக்கும். இலக்கியம் இலக்கியத்திற்கு மட்டும் இருக்கும் ஆனால் வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம் அப்படியல்ல. ஓதி உணர்வதற்கும் பிறர்க்கு உரைப்பதற்கும் உரிய நூல் அது.

“ஓதி உணர்ந்தும் பிறர்க்குஉரைத்தும் தான்அடங்காப்

பேதையின் பேதையார் இல்” (834)

என்பது வள்ளுவம்.

ஓதுவது சிரமம்; ஓதி உணர்வது அதை விடச் சிரமம்; உணர்தல் சிரமம்; உணர்ந்ததை உணர்ந்தபடியே சொல்வது அதை விடச் சிரமம்.

“இணர்ஊழ்த்தும் நாறா மலர்அனையர் கற்றது

உணர விரித்துஉரையா தார்” (650)

படித்ததை சிரமப்பட்டு விளக்கிச் சொல்லி அதைப் பரப்புவதும் சிரமமானது. கொத்தாக மலர் மலர்ந்திருக்கிறது. அந்த மலர்கள் மணம் வீசாத காகிதப் பூக்களாக இருந்தால் பயனில்லை.

“நீதிநெறி உணர் மாந்தராகி. வாழும்

நிலையுணர்ந்து தொண்டாற்றி இன்பம் காண்போம்.” (ஞாக.பா.1)

இவைகளையெல்லாம் தெரிந்தும், பிறருக்கு உணர்த்தியும், சிரமப்பட்டு தாம் படித்ததை வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழாமல் போய்விட்டால் அவன் பேதையிலும் பேதை.

ஆகவே வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியத்தைப் படிக்கின்ற நோக்கமே அதை வாழ்வியல் நூலாக, வருகின்ற சிக்கல்களுக்குத் தீர்வு காணக்கூடியதாக இருப்பது மட்டுமல்ல....

வாழுங்காலத்தில் ஆனந்தமாக வாழ்வது எப்படி என்பதையும் கண்டு கொண்டேன். உணர்ந்து கொண்டேன்.

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!! வாழத் தெரிந்திடல் ஆனந்தமே!!!

## துணைநின்ற நூல்கள்

1. தாயுமானவர் பாடல்கள்,புலவர் வீ. சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
3. தாயுமானவர் நூல்கள், சுவாமி சித்தபவானந்தர், திருப்பராய்த்துறை.
4. இணையதள தகவல்கள்.
5. ஞானக்களஞ்சிய கவிகள், இரா. மாரியம்மாள் மோகன்தாஸ், வேதலோக அன்பு நிலையம், பொள்ளாச்சி
6. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு, மன்னார்குடி பானுகுமார். அழகுப் பதிப்பகம், சென்னை.
7. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.